சிவாச்சாரியாரின்



# அருள்ஜோதி

சமய சஞ்சிகை



ஆசிரியர்

கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**இலங்கை இந்துமத குருபீடாதிபதி**
**சிவாகம ஞானி**
**சிவாச்சார்ய சிம்மம்**

## அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சார்யார்

அவர்களின் ஞாபகார்த்தமாக

**சிவாச்சாரியாரின் ............**

# அருள் ஜோதி

எனும் ஆன்மீக இதழ் வெளி வருகிறது என்பதனை ஆன்மீகப் பெருமக்களுக்கு அறியத்தருகிறோம்.



**சர்வதேச இந்துமத குருபீடாதிபதி**
**சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடாதிபதி**

## கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார்

**(அகில இலங்கை சமாதான நீதவான்)**

## சர்வதேச இந்துமத குருபீடம்

## அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடம்

(அரச அங்கீகாரம் பெற்ற சமயஸ்தாபனம்)

**46, 7வது லேன், (புளூமெண்டோல் வீதி),**
**கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13.**
**தொலைபேசி: 2393436, 0722-422239**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அருள்ஜோதியின் அருள் விருந்து

1. அன்பே சிவம்!... பிற உயிர்களிடம் அன்பும், அனுதாபமும் காட்டுவதே ஒரு மனிதன் செய்ய வேண்டிய மிகப்பெரிய காரியம்.

2. நம்பிக்கைதான் இந்துமதம் கூறும் வாழ்க்கை நெறி. நாம் செய்யும் ஒவ்வொரு செயலையும் நம்பிக்கையோடு செய்தால் வெற்றி நிச்சயம்.

3. காலையிலே நித்திரைவிட்டு எழும்பியதும், உனது உள்ளங்கைகளைப் பார்த்த வண்ணம் இறைவா இன்றைய பொழுது நல்ல பொழுதாக அமைய வேண்டும். என்று குல தெய்வத்தை வேண்டி பிரார்த்தனை செய்தால் அன்றைய பொழுது நல்லதாகவே அமையும்.

4. நினைப்பவை நல்லவைகளானால்.... நடப்பவை நல்லதாக அமையும்.

5. ஒவ்வொரு மனிதனுடைய வாழ்வும், சந்தோஷமானதாக அமைவதற்கும், துக்கமானதாக அமைவதற்கும் அவனுடைய மனமே காரணம்.

6. தாய், தந்தை, குரு இவர்களின் ஆசியைப் பெற்றவர்கள், இறைவனால் ஆசீர்வதிக்கப்படுவர்.

7. அதிஷ்டத்தை நம்பியிருப்பவன் முட்டாள். தனது ஆற்றலை பயன்படுத்துபவன் வீரன்.

8. கடவுளை நோக்கி ஒரு அடி மனிதன் நடந்தால்.... அவனை நோக்கி இறைவன் ஓடி வருவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



சிவாச்சாரியாரின்

# அருள் ஜோதி

(ஆன்மீக சஞ்சிகை)

அருள் 08 | ஐப்பசி – கார்த்திகை – 2004 | ஜோதி – 76

ஆசிரியர் : கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் - ஜே. பி.


## மலர்ந்த புஸ்பங்கள்


1. முதல் வணக்கம் எங்கள் கணபதிக்கே
2. சரணம் சரணம் சபரி கிரீசா
3. உலக நாடுகளில் பிள்ளையார் வழிபாடு
4. பன்னிரு திருமுறைகளில் கணபதி
5. 108 சரணங்கள்
6. ஸ்ரீ சாஸ்தா அஷ்டகம்
7. ஐயப்பன் கவசம்
8. பிரதிஷ்டைகளில் யந்திரங்கள்....
9. சூடிக்கொடுத்த சுடர்க்கொடி
10. அருள்ஜோதி வினா விடை



**சர்வதேச இந்துமத குருபீடம்**

**சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடம்**

(அரச அங்கீகாரம் பெற்ற சமயஸ்தாபனம்)

இல. 46, 7வது லேன், புளூமெண்டால் வீதி, கொட்டாஞ்சேனை, கொழும்பு-13.

தொலைபேசி, தொலை நகல்: 0094-11-2393436

செல்லிட பேசி: (0094)-0722-422239




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# முதல் வணக்கம் எங்கள் கணபதிக்கே!



ஓம் மஹா கணேசாய நம:

மூஷிக வாகன மோதக ஹஸ்த

சாமர கர்ண விளம்பித சூத்ர

வாமன ரூப மஹேஸ்வர புத்ர

விக்ன விநாயக பாத நமஸ்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சரணம் சரணம் சபரி கிரீசா







**லோகவீரம் மஹா பூஜ்யம்**

**ஸர்வ ரக்ஷாகரம் விபும்**

**பர்வதீ ஹ்ருதயானந்தம்**

**சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்**

**சுவாமியே சரணம் ஐயப்பா !**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலக நாடுகளில்..... பிள்ளையார் வழிபாடு



பிரதிபா பிரசுரம் - டாக்டர் நஜன்

பிள்ளையாரின் பெருமை வெறும் ஆற்றங்கரை ஓரத்திலும், அரசமரத் தடியிலும் மட்டும் அல்லாமல் அயல் நாடுகளிலும் பரவி மிகுந்திருக் கிறது.

இந்துக்கள் முழுமுதற் கடவுளாய் வழிபடும் கணபதி, நம் முன்னோர் சென்ற இடமெல்லாம் சென்றார். உலகம் முழுவதிலும் பரவிய ஹிந்து சமயக் கடவுளரில் கணபதிதான் முதலிடம் பெறுகிறார்.

தொன்மையான வரலாறு கொண்ட பாரதம் மிகப்பழங் காலத்தில் இருந்தே வெளிநாடு களுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தது. கடல் கடந்தும் எல்லை கடந்தும் சென்ற நம் வணிகர்கள் தமது பயணமும் வியாபாரமும் இடையூறுகள் இன்றி வெற்றி பெற விக்கினேஸ்வரரை உடன் கொண்டு சென்று வழிபட்டிருக் கிறார்கள். இவர்கள் மூலம் - பிற நாட்டவர்கள் மத்தியிலும் பிள்ளையார் வழிபாட்டில் கவர்ச்சி ஏற்பட்டு - அவர்களும் கணபதியை வழிபடத் தொடங்கியுள்ளனர்.

தமிழகத்தோடு வணிகத் தொடர்பு கொண்டிருந்த ரோமாபுரி மற்றும் கிரேக்க தேசங்களில் தமிழகத்திலிருந்தே பிள்ளையார் வழிபாடு பரவியிருக்க வேண்டும் என்பது வரலாற்றாளர் துணிபு.

இந்துக்களில் வைதீக சமயத் தவர்கள் மட்டுமன்றி, புத்தரைப் பின் பற்றிய பௌத்தர்களும், மகாவீரரைப் பின்பற்றிய சமணர்களும் கூட கணபதியை ஏற்று வழிபடத் தொடங்கியதால் விநாயகர் இந்துக் களின் பொதுப் பண்பாட்டுத் தெய்வமாக உயர்ந்து நின்று விட்டார் எனலாம். எனவே பௌத்தம் மற்ற நாடுகளுக்குப் பரவியபோது பௌத்தர்களோடும் பிள்ளையார் பவனி போயிருக்கிறார். வெளிநாடு சென்ற கணபதி தென்கிழக்கு ஆசியாவில் வைதீகக் கடவுள் ஆகவும், தூரகிழக்கு நாடுகளில் பௌத்தசமயக் கடவுள் ஆகவும் கருதி வழிபடப்பட்டார்.

காலமும் தூரமும் கடந்து அவரது பெருமையென்ன என்பதை இங்கு காண்போம்.

## ஆப்கானிஸ்தான்

ஆப்கானிஸ்தான் இன்றைய பாரத எல்லைக்கு அப்பால் இருக்கலாம். ஆனால் ஹிந்து கலாசார பேரரசுக்குட்பட்ட பகுதிகளுள்தான் இத்தேசம் ஒரு காலத்தில் விளங்கியது.

ஆப்கானிஸ்தானில் சில வருடங்களுக்கு முன்னால் ஒரு விக்கிரகம் கார்டெஸ் (cardez) என்னும் இடத்தில் கண்டெடுக்கப்பட்டுப் பின்னர் அங்கிருந்து காபூலிற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்குள்ள ஹிந்துக்களால் பமீர் திரையரங்கு அருகில் உள்ள பீரதன் நாத் தர்காவில் வைத்து வழிபடப்படுகிறது.

அந்த விக்கிரகம் தரம் குறைந்த சலவைக் கல்லினால் செய்யப் பட்டுள்ளது. அது அறுபது செ. மீ. உயரமும், 35 செ. மீ. அகலமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளது.

விக்ரஹகத்தின் அடியில் உள்ள பீடத்தில் "இப்பெரிய அழகிய மகாவிநாயகர் ஷாஹீ அரசன் ஷாஹீ இங்களன் என்பவனால் அவன் ஆட்சி பீடம் ஏறிய எட்டாம் ஆண்டில் மஹா ஜேஷ்ட மாதத்தில், சுக்ல பக்ஷம், திரயோதசி திதி, விசாக நட்சத்திரம் கூடிய சுபயோக சுபதினத்தில் சிம்ஹ லக்னத்தில் பிரதிஷ்டை செய்யப் பட்டது" என்று குறிக்கப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள அரசன் காஷ்மீரை ஆண்ட நரேந்திர ஆதித்யனாக இருக்கலாமோ என்ற ஐயம் உள்ளது. ஏனெனில் நரேந்திர ஆதித்தியனும் இங்களன் என அழைக்கப்பட்டான். ஆனால் இதில் குறித்துள்ள இங்கள அரசனைப் பற்றித் திட்டவட்டமாக எதுவும் தெரியவில்லை. இவ்விக்கிரகத்தில் கணபதி நின்ற வண்ணத்தில் காட்சியளிக்கிறார். அவரது கரங்கள், கால்கள், மற்றும் மார்புத் தசைகள் திரண்டதாக கலைச்சாயலோடு உள்ளன. சாரநாத்தில் உள்ள குப்தர் கால சிற்பங்களைப் போன்று இச்சிலையின் தலையில் கிரீடமும், கழுத்தைச் சுற்றி காந்தி என்னும் ஆபரணமும் உள்ளன.

கணபதி நான்கு கரங்க ளுடனேயே செதுக்கப்பட்டுள்ளார். ஆனால் துரதிஷ்டவசமாக எல்லாக் கரங்களும் உடைந்த நிலையில் காட்சியளிக்கின்றன. நாகம் ஒன்றைப் பூணூலாகத் தரித்துள்ளார்.

அவர் இடையில் கட்டியுள்ள ஆடையில் சிம்ஹமுகம், தாமரை மொட்டுக்கள் ஆகிய சித்திரங்கள் - மகதக் கலைச் சாயலை ஒத்திருக் கின்றன.

காபூலிற்கு வடக்கே பத்துமைல் தொலைவில் உள்ள சங்கர் தரா எனும் இடத்தில் ஒரு சலவைக்கல் விக்ரஹம் கண்டெடுக்கப் பட்டுள்ளது. இவ்விடத்தில் சூரியன் மற்றும் சிவபெருமானின் விக்கிரஹங்களும் கூடக் கண்டு எடுக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கு கணபதி நின்ற கோலத்திலேயே காட்சி தருகிறார். மற்றப்படி எங்கும் காணப்படுவது போல் இவ்விநாயகர் பானை வயிற்றோடு கூடக் காட்சியளிக்க வில்லை. இவரும் நாக யக்ஞோப வீதத்தைத் தரித்துள்ளார். நாகத்தின் தலையே பூணூலில் உள்ள பிரம்ம முடிச்சாக உள்ளது.

இவருக்கும் நான்கு கரங்கள் உள்ளன. ஆனால் இடது மேல் கரம் உடைந்துள்ளது. கீழிரண்டு கரங்களும் கணங்கள் இருவர் தலையில் வைத்த நிலையில் காணப்படுகின்றன. இந்தக் கணங்கள் கிரேக்க மிடுக்குடன் சுருண்ட முடியுடன் தோற்றமளிக்கின்றனர். இச்சிற்பம் நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று துணிந்து மதிப்பிடலாம். இன்றும்கூட இவ் விக்ரஹம் காபூலிலுள்ள ஹிந்துக் களால் கடற்கரை பஜாரில் (நரசிங் த்வாரா) வைத்து வழிபடப்படுகிறது.

இந்து சமயம் தழைத்து ஓங்கி நிலை பெற்றுள்ள நம்நாட்டில் கூட இத்தகைய புராதன கணேச விக்ரஹங்கள் இன்று காணப்பெற வில்லை. ஆனால் ஹிந்து சமயம் நிலைபெறாத ஆப்கானிஸ்தானில் இச்சிற்பங்கள் காணக் கிடைக் கின்றன.

ஆப்கானிஸ்தானம் இன்றைக்கு இஸ்லாமிய சமயத்தைத் தழுவிய தனித்த ஒரு நாடாக விளங்கலாம். ஆனால் ஒரு காலத்தில் அங்கு சைவமும், வைணவமும், புத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயமும் சிறப்புடன் விளங்கின என்பதை யாராலும் மறுக்க முடியாது.

## நேபாளம்

நேபாளத்தில் கணபதி வழிபாடு துவங்கிய காலத்தை வரையறுத்துச் சொல்ல இயலாது. ஆயினும் அசோகனின் மகள் சாருமதி என்பவள் நேபாளத்தில் கணபதிக் காகக் கோயில் ஒன்று கட்டினாள் என்ற ஐதீகமொன்று நிலவுகிறது. இதை மெய்ப்பிக்கும் வரலாற்றுச் சான்று எதுவும் இன்று இல்லை. நேபாளத்தில் எட்டாம் நூற்றாண்டில் தொடங்கிய கணபதி வழிபாடு பத்தாம் நூற்றாண்டில் பிரபல மடைந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது.

இங்கு விநாயகர் இந்துக் களாலும், பௌத்தர்களாலும் வழிபடப்படுகிறார்.

பௌத்தர்கள் கணபதியை "சித்தி தாதா" எனப் போற்றி வழிபடு கின்றனர். "கணபதி ஹிருதயம்" என்ற ஸ்தோத்திரமானது பகவான் புத்தரால் ஆனந்தர் என்பவருக்கு ராஜக்ரு ஹத்தில் உபதேசிக்கப்பட்டது என நேபாள புராணக் கதையொன்று கூறுகிறது. ஏராளமான கணபதி உருவங்கள் நேபாளத்தில் கிடைத்து உள்ளன. இவற்றுள் காத்மண்டுவில் கிடைத்துள்ள இரண்டு உருவங்கள் குறிப்பிடத்தக்கன.

இவ்விரு உருவங்களிலும் கணபதி இருகால்களின் அடியிலும் இரண்டு எலிகளை மிதித்துக் கொண்டு இருப்பது போல செதுக்கப்பட்டுள்ளார்.

ஒரு உருவத்தில் விநாயகருக்கு நான்கு கரங்களும், மற்றொன்றில் பதினாறு கரங்களும் உள்ளன. சிவபெருமானுடைய சின்னங்கள் சிலவும் கணபதியின் உருவச் சிற்பங்களில் சேர்க்கப் பட்டிருப்பது எல்லை கடந்த கணபதியின் விசேஷ அம்சமாகும்.

ஹேரம்ப கணபதியின் வடிவம் - நேபாளத்தில் பிரசித்தி பெற்றதாக உள்ளது. இந்த வடிவில் அவரது வாகனமாகச் சிங்கம் உள்ளது. ஐந்து தலைகள், பத்து கரங்கள் மற்றும் மடியில் சித்திதேவி.

1695ஆம் ஆண்டைச் சேர்ந்த ஹேரம்ப விநாயகர் சிலை ஒன்று பட்காவ்ன் (Bhatgaon) என்ற இடத்தில் கிடைத்துள்ளது. இதில் வழக்கத் திற்கு மாறாக விநாயகர் மூஷிகத்தின் மீது அமர்ந்திருக்கிறார்.

மூனிச்சில் உள்ள வால்டர் குண்டே அருங்காட்சியகத்தில் (Museum for Volter Kunde) உள்ள விநாயகர் சிலையில் ஒரு காலில் அடியில் மூஷிகமும் இன்னொரு காலின் அடியில் சிங்கமும் உள்ளன.

நேபாளத்தில் கணேசருக்கு எனச் சில தனி ஆலயங்கள் உள்ளன. அவற்றில் ஸிம்பி-தண்டு (Zimpi - Tandu) என்ற இடத்தில் உள்ள கோவில் பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. சித்தி விநாயகர் ஆலயம் ஒன்று சங்கு (Sanku) வில் இருக்கிறது. தன்கோட்டிற்கு (Thankot) வடக்கே உள்ள விநாயகர் ஆலயத்தில் ஸ்ப்த - மாதர்கள் சிலைகள் உள்ளன. பாரதத்திலும் கணேசருடன் ஸப்த மாதர்களைச் சேர்த்துப் பார்க்கும் பழக்கம் உள்ளது.

அறுவடை விழாக்களில் கணபதி பிரதான இடத்தை வகிக்கிறார். நம்நாட்டிலும் கூட கொங்கணப் பகுதியில் கணபதி அறுவடை விழாக்களிலும் பிரதான தெய்வமாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாடப்படுகிறார்.

## திபெத்தில்

நேபாளம் போன்று திபெத்தில் கணபதி அத்துணை பிரபலம் அடையவில்லை. மஹாயான புத்த சமயத்தின் பரவலே இதற்குக் காரணமாயிருந்திருக்கலாம். பேய் பிசாசுகளினின்றும் மக்களை ரக்ஷிக்கும் கடவுளாகக் கணபதியை திபெத்தின் மேற்குப் பகுதி வாழ் மக்கள் வழிபட்டனர்.

இதனால் கணபதி திபெத்தில் உள்ள ஆலயங்களிலும் பிரதான வாயிலின் மேற்புறத்தில் காணப் படுகிறார்.

இந்து ஆலயங்களில் நம் நாட்டில் கூட எட்டாம் நூற்றாண்டு முதல் கணபதி பிரதான வாயிலின் அருகே வீற்றிருக்கச் செய்யப் பட்டுள்ளார்.

கணபதியைப் பெண் உருவத்தில் வழிபடுவது மிக அபூர்வம். நம் நாட்டில் மத்திய பிரதேசத்திலுள்ள பேராகாட்டில் (Bheraghat) "அறுபத்து நான்கு யோகினி" ஆலயத்தில் "கணேசனி" என்ற பெயரில் கணபதி பெண் உருவத்தில் வழிபடப்பட்டுள்ளார்.

திபெத்திய பௌத்தர்கள் மஹாகாலன் கிருஷ்ண மஞ்சுஸ்ரீ போன்ற பௌத்த தெய்வங்களின் காலடியில் ஆண், பெண் கணேச உருவங்கள் மிதிபட்டுக் கிடப்பதாக வும் சித்தரித்து இருந்தனர்.

கோடானில் (Khotan) கணேசர் பிரசித்தி பெற்றிருந்தார். எண்டெ ரேயில் (Endere) ஸ்தூபி ஒன்றினை ஆழ்ந்து ஆராயும் போது ஸ்டெய்ன் (Stain) என்பவர் பல வெண்கலப் படிமங்களையும் - வண்ணம் பூசப்பட்ட மரத்தால் ஆன விநாயகர் சிலைகளையும் கண்டெடுத்தார். (Bezaklik) பெசாக்ளிக் என்னும் இடத்தில் உள்ள குகைக் கோயில்களில் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்களில் ஆனை முகத்தோனின் முகத் தோற்றம் - யானை முகமாக இல்லாமல் சற்று மாறுபட்டு - காட்டுப் பன்றியின் முகத் தோற்றம் போலச் சித்தரிக்கப்பட்டுள்ளது. சிவன் - கார்த்திகேயன் ஆகியோருடன் சேர்ந்து சித்தரிக்கப் பட்டுள்ளதால் - இது கணேசர் சிலைதான் என்பதில் சந்தேகம் இல்லை. ஒருகால் "பிள்ளையார் செதுக்கப் போய் - பன்றியாய் முடிந்த கதையாக" இருக்கலாம்.

கோடானிலிருந்து 75 மைல் தூரத்தில் காக்லிக் என்னும் இடத்தில் - இரண்டு விநாயகர் உருவங்கள் வரையப்பட்டுள்ளன. இவற்றில் ஒன்று சோனி விநாயகராக உள்ளது. மூன்று கரங்கள் உள்ளன. இவர் மேலே உத்தரீயமும் கீழே அந்தரீயமும் உடுத்தியுள்ளார்.

இன்னொரு உருவம் கணேசர் உட்கார்ந்து இருப்பதுபோலக் காட்டப்பட்டுள்ளது. தலையின் பின்புறம் பிரவை வளையம் உள்ளது. தலையில் கரீடமும் உடலில் ஆபரணங்களும் அணிந்திருக்கிறார். வலம்புரி விநாயகராக இவர் தோற்றமளிக்கிறார். அவர் பார்வை அவரது இடது புறம் நின்று கொண்டிருக்கும் பெண் ஒருத்தியை நோக்கியதாக உள்ளது. நான்கு சரங்களுடன் நீல நிற அந்தரீயம் அணிந்தவராக இவர் சித்தரிக்கப் பட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பர்மாவில்

பர்மா இன்று பெரும் பான்மையான பௌத்த நாடு. இங்கு 11ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தான் பௌத்தம் நுழைந்திருக்க வேண்டும். அதற்கும் பல நூற்றாண்டு களுக்கு மன்பே வைதிக சமயம் இங்கு கோலோச்சி இருந்திருக்கிறது. ஒரு காலத்தில் வைதிக சமயத்தைப் பின் பற்றியவர்கள் இங்கு வாழ்ந்தார்கள். நமது புராணங்களில் ப்ரும்மதேசம் என்று குறிக்கப்படும் பகுதி இதுவேதான். கீழை பர்மாவில் ஏராளமான பிள்ளையார் சிலைகள் கிடைத்துள்ளன. சிறியதும் பெரியது மாக உள்ள இச்சிலைகளில் பெரும்பாலானவை பாரதத்தின் மற்றப் பகுதிகளிலிருந்து வியாபார நிமித்தமாக - பர்மா வந்த வர்த்தகர்கள் தங்களுடன் கொண்டு வந்தவையே ஆகும். இன்றும் பர்மா வணிகப் பெருமக்களிடையே தான் கணபதி பிரதான தெய்"வமாகக் கருதப்படுகிறார்.

ரங்கூன் மியூஸியத்தில் இரண்டு அற்புதமான கணேச விக்ரஹங்கள் உள்ளன. இரண்டுமே அளவில் சிறியவை. ஒரு சிலை விநாயகரை பத்மாஸனத்தில் வீற்றிருப்பவராகச் சித்தரிக்கிறது. இவருக்கு ஆறு கரங்கள். கரங்களில் எவற்றை ஏந்தியிருக்கிறார் என்பது தெளிவாக இல்லை.

பாகனில் உள்ள ஷ்வேசண்டா பகோடா வளாகத்தில் பிரமீடுகள் போன்ற பௌத்த விஹாரங்களின் - மூலைகளில் துவாரபாலக தேவதை களில் கணேசரும் இடம் பெற்றிருக் கிறார் என்பதை பேராசியர் என். ஆர். ரே அவர்கள் "Brahmanical Gods in Burma" என்ற நூலில் விளக்கியுள்ளார்.

## சீனாவில்

மிகப்பழங்காலத்திலேயே கணேசர் மத்திய ஆசியா வழியாகச் சீனாவைச் சென்று அடைந்திருக் கிறார். குகை குடைவரைகளில் செதுக்கப் பட்டுள்ள கணேச சிற்பங்கள் துன் ஹுவாங் (Tun Huang) என்ற இடத்தில் கிடைத்துள்ளன. அதேபோன்று குங்-சியான் (Kung - Hesein) என்ற இடத்தில் குகைக் கோவிலிலும் கணேச சிற்பம் உள்ளது. முதல் குகையில் பல ஹிந்தி தெய்வங்களோடு கணேசரும் செதுக்கப்பட்டுள்ளார். இது 6-ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம். பத்மாஸனத்தில் வீற்றிருப்பது போலக் கணேசர் காட்சியளனிக்கிறார். இரு கரங்களில் ஒன்றில் சிந்தாமணியும், மற்றொன்றில் தாமரை மலரும் தாங்கிக் காட்சி தருகிறார். 'யானைகளின் அரசன்' என்று அவரை வர்ணித்திருக்கிறார்கள்.

சீனாலிலும் ஜப்பானிலும் கணேசர் இரு தோற்றங்களில் காட்சி தருகிறார். ஒரே உருவமாக உள்ள விநாயகர். இரு உருவங்களாக உள்ள காங்கிடென் (Kagi-ten) என்ற சிற்பங்கள். உட்கார்ந்த நிலையில் உள்ள கணேசர் சிற்பங்களே அதிகம் கிடைத்துள்ளன. இவர் ஒரு கரத்தில் பரசும் ஒரு கரத்தில் கந்த மூலமும் தாங்கியுள்ளார். வாமாசாரத்தைப் பின்பற்றியவாகள் மட்டுமே (Kangi - tel) காங்கிடென் என்று இரு உருவங்கள் இணைந்த கணேசரை இரகசியமாக வழிபட்டு வந்திருக்கின்றனர். 1017-ல் சென் ஸுங் (Chen Tsung) என்ற பேரரசர் இத்தகைய வழிபாட்டைத் தடை செய்திருந்ததே இதற்குக் காரண மாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் நாட்டிலிருந்து குறிப்பாகத் தென் பாரதத்திலிருந்து போதோய் ரிஷி என்பவர் சீனாவுக்குச் சென்றாராம். இவர் பெயர் போதாயன ரிஷியோ என்று தோன்றுகிறது. இவர் பல நூல்களை அந்நாட்டு மொழியில் மொழி பெயர்த்திருக்கிறார்.

அவற்றில் ஷிஜீசோரோ என்ற நூலில் சீன மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

## ஜப்பானில்

9ம் நூற்றாண்டு வரை ஜப்பானில் கணேச வழிபாடு இருந்ததற்கான சான்றுகள் இல்லை. கோல்ஸோ தயிஷி (Kolso Daishi) என்ற பௌத்த துறவி மூலம் கணேச வழிபாடு சீனாவிலிருந்து ஜப்பானில் நுழைந்தது. விநாயகர் வடிவில் பல ஊர்களில் கணேசர் வழிபடப்பட்டார். சில ஊர்களில் விநாயகருக்கு என ஆலயங்கள் இருந்தன. சாதாரணமாக கணேசர் புன்முறுவல் பூத்த முகத்துடன் நின்ற கோலத்தில் இரண்டு, நான்கு அல்லது ஆறுகரங்களுடன் காட்சி தருகிறார். இவர் ஷோதேன் - சோ (Kakuzesn Cho) வடிவில் அவர் மூன்று தலைகளுடன் காணப்படுகிறார். அவரது ஒவ்வொரு முகத்திலும் மூன்று கண்கள் உள்ளன. மலைமீது அமர்ந்த தோற்றத்தில் அவர் "கஜேந்திரன்" என்று அழைக்கப்பட்டு வழிபடப் படுகிறார். வாமயோகத்தின் அடிப்படையில் - அவர் காங்கிடென் வடிவிலும் ரகசியமாக வழிபடப் பட்டிருக்கிறார்.

12-ம் நூற்றாண்டில் ஷின்காகு என்பவரால் எழுதப்பட்ட பென்ஸோன் ஸக்கி என்ற நூலில் விநாயகரின் உருவ இலக்கணங்கள் குறிப்பிடப் பட்டுள்ளன. தரணி ஷுக்யோ, ஷிஜ் ஜுஹோக்யோகி ஆகிய நூல்களில் வாமயோக பத்ததியில் காணப்படும் இரு உருவ விநாயகர் பற்றிக் குறிப்புகள் உள்ளன.

பௌத்த தாந்தரிக மார்க்கத் தவர்கள் இரட்டை உருவப் பிள்ளையாரில் - ஆண் உருவை மஹா - வைரோசனரின் தோற்றம் என்றும், பெண் உருவை அவலோகி தேஸ்வரரின் உருவம் என்றும் கருதுகின்றனர்.

விநாயகரைச் சரிவர வணங்கா விடில் அவர் பல துன்பங்களைத் தருவார் என்று ஜப்பானியர் திடமாக நம்புகின்றனர். வெவ்வேறு விநாயக மந்திரங்களுக்கு வெவ்வேறு - தொல்லைகளை நீக்கும் - சக்தி உண்டு என்றும் அவர்கள் நம்புகிறார்கள்.

ஜப்பானிய மன்னர்களின் அரண்மனையில் தொடர்ந்து விநாயக வழிபாடு முக்கியமானதாகக் கருதப்படுகிறது. ஏராளமான மக்கள் இன்றுங் கூட தமக்குப் தமக்குப் பல நன்மைகளை வேண்டி பிள்ளையாரை வழிபடுகின்றனர்.

விநாயகர் திசைகளைக் காவல் செய்யும் தெய்வமாகவும் வழிபடப் படுகிறார்.

மங்கோலியாவில்

புத்தமதம் மங்கோலியாவில் நுழையும் போதே கணேசரும் நுழைந்திருக்கிறார். சிவபெருமானின் அம்சமாக மஹாகாலன் என்ற தெய்வத்தை மங்கோலியர்கள் வழிபட்டு வந்தனர். எனவே கணேச வழிபாடும் அங்கு கூடவே இடம் பெற்றுவிட்டது. நார்த்தானில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டெடுக்கப்பட்டுள்ள 500 தெய்வங்களில் 'நிருத்ய கணபதி' வடிவம் உள்ளது. மூஷிக வாகனத்தில் விநாயகர் நின்று நடனமாடுகிறார். மூஞ்சூரின் வாயில் சிந்தாமணி உள்ளது. நான்கு கரங்களில் ஒன்றில் கொழுக்கட்டை, நான்காவதில் திரிசூலம் ஏந்தியுள்ளார்.

மங்கோலியாவில் வழங்கும் புராணக் கதையின்படி மங்கோலிய நாட்டின் முதல் மன்னான பாக்ஸ" பைஸின் (Hphags Pais) தந்தை விநாயகரின் பக்தராம். விநாயகர் அவரை தும்பிக்கையால் தூக்கி மேரு பர்வதத்தின் சிகரத்தில் வைத்து அங்கிருந்து மங்கோலியா தேசத்தைக் காட்டி "உன் மகன் இந்நாட்டின் அரசாள்வான்" என்று கூறியதாகவும் அதன்படியே நடந்ததாகவும் கூறப்படுகிறது.

## இலங்கையில்

1934 - 35ல் நடந்த அகழ்வு ஆராய்ச்சியில் மிஹிந்தலே அருகில் கந்தக செட்டிங்க ஸ்தூபி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இந்த ஸ்தூபியில் செதுக்கப் பட்டுள்ள கணங்களில் - யானைத் தலையுடன் குள்ளமான தோற்றத்தில் விநாயகர் காட்சி தருகிறார்.

ஆந்திரப் பிரதேசம் அமராவதியில் உள்ள சிற்பங்களில் இது போன்ற கணங்கள் செதுக்கப் பட்டுள்ளன. பௌத்த சமயக் கதைகளில் கணங்களில் ஒருவராகக் கணேசர் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறார். இது வைதிக புராணக் கதைகள் - பௌத்தத்தில் ஏற்படுத்திய தாக்கத்தின் விளைவே.

பொலன்னறுவை என்னும் இடத்தில் உள்ள சிவன் கோவிலில் விநாயகர் சிலை இடம் பெற்றுள்ளது. இடது கரத்தில் மோதகத்துடன் இவர் காட்சி தருகிறார்.

கதிர்காமத்தில் உள்ள முருஆலயத்தில் விநாயகருக்கு தனிச் சன்னிதியே உள்ளது.

உ

சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடத்தின்

22வது ஆண்டு நிறைவை முன்னிட்டு

ஆன்மீகப் பெருவிழா

நவம்பர் மாதம் வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

ஸ்ரீ சாம்பசிவ ஸ்ரீ மணிகண்ட சர்மா
(ஸ்ரீ சாஸ்தாபீட இளவரசன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பன்னிரு திருமுறைகளில் கணபதி

- செல்வி S. ஸ்ரீலக்ஷ்மிப்ரதா -

**திருமுறை - 1 : சம்பந்தர் தேவாரம்**

பிடியத னுருவுமை கொள மிக கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடி கணபதி வரவருளினன் மிகுகொடை
வடிவின பயில் வலிவல இறையே. (திருவலிவலம்)

**திருமுறை - 2**

கரியின் மாமுகமுடைய கணபதி தாதைபல் பூதுந்
திரிய வில்பலிக்கே குஞ்செழுஞ் சுடர் சேர்தரு மூதூர்
சரியின் முன்கை நன் மாதா சதிபட நடமாடி
உரிய நாமங்கள் ஏத்துமொப்பி புனற் காழி நன்னகரே (சீகாழி)

**திருமுறை - 4 : திருநாவுக்கரசர்**

பலபல காமத்தராசி பதைத்தெழுவார் மனத்துள்ளே
கலமலக் கிட்டுத் திரியும் கணபதி என்றும் களிறும்
வலமேந்திரண்டு சுடரும் வான் கயிலாயை மயிலையும்
நலமார் கெலிப்புலனும் உடையார் ஒருவர் தமர் நாம்
அஞ்சுவதியா தொன்றுமில்லை அஞ்சவருமதுமில்லை. (திருவதிகை)

**திருமுறை - 6**

கைவேழ முகத்தவனைப் படைத்தார் போலும்
கயாசுரனை யதனாற் கொல்வித்தார் போலும்
செய்வேள்வித் தக்கனை முன் சிதைத்தார் போலும்
திசைமுகன் தன் சிரமொன்றும் சிதைத்தார் போலும்
மெய் வேள்வி மூர்த்தி தலையறுத்தார் போலும்
ஐவேள்வி யாறங்கமானார் போலும்
வியன் வீழி மிழலையிடம் கொண்டார் போலும்,
அடியேனை ஆளுடைய வடி கடாமே (திருவீழிமிழலை திருத்தாண்டகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருந்தாத செய்கைப் பொலியக் கண்டேன்
போற்றிசைத்து விண்ணோர் புகழ்கண்டேன்
பரிந்தார்க்கு அருளும் பரிசும் கண்டேன்
பாராகிப் புலனாகி நிற்கக் கண்டேன்
விருந்தாய் பரந்த தொகுதி கண்டேன்
மெல்லியனும் விநாயகனும் தோன்றக் கண்டேன்
மருந்தாய்ப் பிணி தீர்க்குமாறு கண்டேன்
வாய்மூரடிகளை நான் கண்டவாறே(திருவாய்மூர் - திருத்தாண்டகம்)

**திருமுறை - 9 : திருமாளிகைத் தேவர்**

தன தனற்றேழா சங்கரா சூலபாணியே தாணுவே சிவனே
கனக நற்றூணே கற்பகக் கொழுந்தே கண்கள் மூன்றுடையதோர்
அனகனே குமர விநாயக சனக அம்பலத்த மரசே கரனே (கரும்பே
உன் கழல் இணையென் நெஞ்சினுள் இனிதாத் தொண்டனேன்
நுகரு மாநுகரே (திருவிசைப்பா - திருப்பல்லாண்டு)

**திருமுறை - 10 : திருமூலர்**

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன் தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே (திருமந்திரம்)

**திருமுறை - 11 : (i) சேரமான் பெருமான் நாயனார் - நாமஞ்சேர்**

வேழமுகத்து விநாயகனை உள்ளுறுத்தி - திருக்கயிலாய ஞான உலா

**(ii) கபிலதேவர் நாயனார்**

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கு - முருவாக்கு
மாதலால் வானேருமானை முகத்தானை
காதலால் கூப்புவர் தம் கை. - மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### (iii) நம்பியாண்டார் நம்பி

என்னை நினைந்தடிமை கொண்டென் இடர் கெடுத்து
தன்னை நினையத்த தருகின்றான் - புன்னை
விரசு மகிழ் சோலை வியனாதையூர் முக்கண்
அரசு மகிழ் அத்தி முகத்தான் - திருநாரையூர் விநாயகர் இரட்டை
மணிமாலை

### (iv) இளம் பெருமானடிகள்

உழிதரன் மடிந்து கழுது கண்படுக்கும்
இடறாது முது காட்டுச் சீரியல் பெரும்
புகர் முகத் துளைக்கை யுரவோன் தாதை
நெடியோன் பாகநின்சுடர் மொழி யாண்மை பயிற்று
நாவலர்க் கிடர்தரு தீவினை கெடுத்தலோவெளிதே - சிவபெருமான்
முன்மணிக் கோவை

### (v) அதிராவடிகள்

நிலத்துலங்க நெடுவான்
தலத்துளங்கச் சப்பாணி கொட்டு கலந்துளங்கோள்
காமரி யீன்ற கருங்கைக் கடதடத்து மாமரி யீன்ற மணி - மூத்த
பிள்ளையார் திருமும்மணிக் கோவை

**திருமுறை - 12 : சேக்கிழார்**

எடுக்கும் மாக்கத்தை இன்தமிழ் செய்யுளாய்
நடக்கும் மேன்மை நமக்கருள் செய்திட
நடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீள் முடிக்
கடக்களிற்றைக் கருத்துள் இருத்துவாம்.

**புராணங்களில் கணபதி காப்புச் செய்யுள்கள்**

திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுரை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவோம். - (கந்த புராணம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தியாகி சிவமாகி தனிப்பர
முத்தியான முதலைத் துதி செய்
சுத்தியாகிய சொற்பொருள் நல்குவ
சித்தியானை தன்செய்ய பொற்பாதமே - திருவிளையாடற் புராணம்

பண்ணியமும் பெண்கோடும் பாசாங்குசப் படையும்
நண்ணிய செங்கைத் தலத்து நாதா - ஒரு கோட்டுத்
தண்ணிய வெண்பிறைத் தாழ்சடையாய் மெய்யடியார்
எண்ணிய எண்ணியாங் கீழ்ந்தருளும் வள்ளலே - காஞ்சிப் புராணம்

வான நாடர்கள் மாதவர் நாடரும்
மோன ஞான முழுதும் உணர்ந்திடத்
தான மேவும் அடவிகடா சலத்தான்
மாமுகதண்ணலை ஏத்துவாம் - சிதம்பர புராணம்

திருமன்னு வேள்வி மவைமுனிவர் மனப்
புலத்தெழுந்து சிறப்பினோங்கிக்
கருணை தழைத்தற மரும்பி ஞானம் பூத்
தகல் வினையைக் காய்த்துத் தொல்லை
யிருளகன்றி முத்தி பழுத் தின்ப நறுஞ் சுவையென்று மினிது நல்கு
மருமலிபூம் பொழிலகரூர் மாற்றுரைத்த
கற்பகத்தை வணங்கி வாழ்வோம் - திருவாரூர் புராணம்

சிந்தையிடர்க் கடனீந்திச் சிவானந்த
முணர்ந்திடவும் சிவானு பூதிப்
பந்தமுறச் சிவானந்த பரவையிடைப் படிந்திரவும் பற்றுதல்கும்
இந்திரியப் பகை தடிந்தி யான் எனது நீங்கும் வரிதய மேவும்
ஐந்துகரத்தந்தி முகத் தெந்தையிரு
பதாம்புயங் களகத்து வைப்பாம் - சரப புராணம்

- சுபம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## சாமியே சரணம் ஐயப்பா

# 108 சரணங்கள்

ஓம் கன்னிமூல கணபதி பகவானே சரணம் ஐயப்பா
ஓம் காந்தமலை ஜோதியே சரணம் ஐயப்பா
ஓம் ஹரிஹர சுதனே சரணம் ஐயப்பா
ஓம் அன்னதான பிரபுவே சரணம் ஐயப்பா
ஓம் ஆறுமுகன் சோதரனே சரணம் ஐயப்பா
ஓம் ஆபத்தில் காப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் இன்தமிழ்ச் சுவையே சரணம் ஐயப்பா
ஓம் இச்சை தவிர்ப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் ஈசனின் திருமகனே சரணம் ஐயப்பா
ஓம் ஈடில்லா தெய்வமே சரணம் ஐயப்பா
ஓம் உண்மைப் பரம்பொருளே சரணம் ஐயப்பா
ஓம் உலகாளும் காவலனே சரணம் ஐயப்பா
ஓம் ஊமைக்கருள் புரிந்தவனே சரணம் ஐயப்பா
ஓம் ஊழ்வினை அழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் எளியோர்க்கு அருள்பவனே சரணம் ஐயப்பா
ஓம் எங்கள் குலதெய்வமே சரணம் ஐயப்பா
ஓம் ஏழைப் பங்காளனே சரணம் ஐயப்பா
ஓம் ஏகாந்த மூர்த்தியே சரணம் ஐயப்பா
ஓம் ஐங்கரன் தம்பியே சரணம் ஐயப்பா
ஓம் ஒப்பில்லாத் திருமணியே சரணம் ஐயப்பா
ஓம் ஒளிதரும் திருவிளக்கே சரணம் ஐயப்பா
ஓம் ஓங்காரப் பரம்பொருளே சரணம் ஐயப்பா
ஓம் ஔடதங்கள் அருள்பவனே சரணம் ஐயப்பா
ஓம் சௌபாக்யம் அளிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் கலியுக வரதனே சரணம் ஐயப்பா
ஓம் சபரிமலை சாஸ்தாவே சரணம் ஐயப்பா
ஓம் சிவன் மால் திருமகனே சரணம் ஐயப்பா
ஓம் சிவவைஷ்ணவ ஐக்கியமே சரணம் ஐயப்பா
ஓம் அச்சங்கோயில் அரசே சரணம் ஐயப்பா

ஓம் ஆரியங்காவு ஐயாவே சரணம் ஐயப்பா
ஓம் குளத்துப்புழைப்பாலனே சரணம் ஐயப்பா
ஓம் பொன்னம்பலவாசனே சரணம் ஐயப்பா
ஓம் வில்லாளி வீரனே சரணம் ஐயப்பா
ஓம் வீமணிகண்டனே சரணம் ஐயப்பா
ஓம் உத்தரத்தில் உதித்தவனே சரணம் ஐயப்பா
ஓம் உத்தமனே சத்தியனே சரணம் ஐயப்பா
ஓம் பம்பையிலே பிறந்தவனே சரணம் ஐயப்பா
ஓம் பந்தள மாமணியே சரணம் ஐயப்பா
ஓம் சகலகலை வல்லோனே சரணம் ஐயப்பா
ஓம் சாந்தம் நிறை மெய்ப்பொருளே சரணம் ஐயப்பா
ஓம் குருமகனின் குறைதீர்த்தவனே சரணம் ஐயப்பா
ஓம் குருதட்சணை அளித்தவனே சரணம் ஐயப்பா
ஓம் புலிப்பாலை கொணர்ந்தவனே சரணம் ஐயப்பா
ஓம் வன்புலியின் வாகனனே சரணம் ஐயப்பா
ஓம் தாயின் நோய் தீர்த்தவனே சரணம் ஐயப்பா
ஓம் குருவின் குருவே சரணம் ஐயப்பா
ஓம் வாபரின் தோழனே சரணம் ஐயப்பா
ஓம் துளசிமணிமார்பனே சரணம் ஐயப்பா
ஓம் தூயவுள்ளம் அளிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் இருமுடிப்பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் எருமேலி சாஸ்தாவே சரணம் ஐயப்பா
ஓம் நித்திய பிரம்மச்சாரியே சரணம் ஐயப்பா
ஓம் நீலவஸ்திர தாரியே சரணம் ஐயப்பா
ஓம் பேட்டைத்துள்ளும் பேரருளே சரணம் ஐயப்பா
ஓம் பெரும் ஆணவத்தை அழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் சாஸ்தாவின் நந்தவனமே சரணம் ஐயப்பா
ஓம் சாந்திதரும் பேரழகே சரணம் ஐயப்பா
ஓம் பேரூத்தோடு தரிசனமே சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் பேதமையே ஒழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் காலை கட்டி நிலையமே சரணம் ஐயப்பா
ஓம் அதிர்வேட்டுப் பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் ஆனந்தமிகு பஜனை பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் கல்லிடும் குன்றே சரணம் ஐயப்பா
ஓம் உடும்பாறைக் கோட்டையே சரணம் ஐயப்பா
ஓம் கரியிலந்தோடே சரணம் ஐயப்பா
ஓம் கரிமலை ஏற்றமே சரணம் ஐயப்பா
ஓம் கரிமலை இறக்கமே சரணம் ஐயப்பா
ஓம் பெரியானை வட்டமே சரணம் ஐயப்பா
ஓம் சிறியானை வட்டமே சரணம் ஐயப்பா
ஓம் பம்பா நதி தீர்த்தமே சரணம் ஐயப்பா
ஓம் பாவமெல்லாம் அழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் திருவேணி சங்கமமே சரணம் ஐயப்பா
ஓம் ஸ்ரீ இராமர் பாதமே சரணம் ஐயப்பா
ஓம் சக்திபூஜை கொண்டவனே சரணம் ஐயப்பா
ஓம் சபரிக்கு அருள் செய்தவனே சரணம் ஐயப்பா
ஓம் தீப ஜோதித் திரு ஒளியே சரணம் ஐயப்பா
ஓம் தீராத நோய் தீர்ப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் பம்பா விளக்கே சரணம் ஐயப்பா
ஓம் பழவினைகள் ஒழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் தென்புலத்தார் வழிபாடே சரணம் ஐயப்பா
ஓம் திருபம்பையின் புண்ணியமே சரணம் ஐயப்பா
ஓம் நீலிமலை ஏற்றமே சரணம் ஐயப்பா
ஓம் நிறைவுள்ளம் தருபவனே சரணம் ஐயப்பா
ஓம் அப்பாச்சி மேடே சரணம் ஐயப்பா
ஓம் இப்பாச்சிக் குழியே சரணம் ஐயப்பா
ஓம் சபரிபீடமே சரணம் ஐயப்பா
ஓம் சரங்குத்தி ஆலே சரணம் ஐயப்பா
ஓம் உரல்குழிதீர்த்தமே சரணம் ஐயப்பா
ஓம் கருப்பண்ண சாமியே சரணம் ஐயப்பா
ஓம் கருத்த சாமியே சரணம் ஐயப்பா
ஓம் பதினெட்டாம் படியே சரணம் ஐயப்பா
ஓம் பகவானின் சந்நிதியே சரணம் ஐயப்பா
ஓம் பரவசப் பேருணர்வே சரணம் ஐயப்பா
ஓம் பசுவின் நெய் அபிஷேகமே சரணம் ஐயப்பா
ஓம் கற்பூரப்பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் நாகராசா பிரபுவே சரணம் ஐயப்பா
ஓம் மாளிகைப் புறத்தம்மனே சரணம் ஐயப்பா
ஓம் மஞ்சமாதா திருவருளே சரணம் ஐயப்பா
ஓம் அக்கினிக் குண்டமே சரணம் ஐயப்பா
ஓம் அலங்காரப் பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் பஸ்மக் குளமே சரணம் ஐயப்பா
ஓம் சற்குரு நாதனே சரணம் ஐயப்பா
ஓம் மகர ஜோதியே சரணம் ஐயப்பா
ஓம் மங்கள மூர்த்தியே சரணம் ஐயப்பா
ஓம் ஸ்வாமியே சரணம் ஐயப்பா

**சாமியே சரணம் ஐயப்பா**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

சாமியே சரணம் ஐயப்பா

# ஸ்ரீ சாஸ்தா அஷ்டகம்

மூஷிக வாகன மோதக ஹஸ்த சாமரகர்ண விளம்பித ஸூத்ர
வாமனரூப மஹேஸ்வர புத்ர விக்ன விநாயக பாத நமஸ்தே
ஓம் கன்னிமூல கணபதி பகவானே சரணம் ஐயப்பா.

லோகவீரம் மஹா பூஜ்யம் ஸர்வ ரக்ஷாகரம் விபும்
பார்வதீ ஹ்ருதயானந்தம் சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா

விப்ர பூஜ்யம் விஸ்வ வந்த்யம் விஷ்ணு சம்போ ப்ரியம்ஸுதம்
க்ஷிப்ர ப்ரசாத நிரதம் சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா

மத்த மாதங்க கமணம் காருண்யாம்ருத பூரிதம்
ஸர்வ விக்ன ஹரம்தேவம் சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா

அஸ்மத் குலேச்வரம் தேவம் அஸ்மத் சத்ரு விநாசனம்
அஸ்மத் இஷ்ட ப்ரதா தாரம் சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா

பாண்யேச வம்ச திலகம் கேரளே கேளி விக்ரஹம்
ஆர்த்த த்ராண பரம்தேவம் சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா

பஞ்சரத்னாக்யமே தத்யோ நித்யசுத்தப்படேன் நரஹா
தஸ்யப் பிரசன்னோ பகவான் சாஸ்தாவசதி மானசே
சுவாமியே சரணம் ஐயப்பா

ஸ்ரீ பூத நாத சதானந்த ஸர்வ பூத தயாபர
ரட்ச ரட்ச மஹா பாகு சாஸ்த்ரே துப்யம் நமோ நமோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

சாமியே சரணம் ஐயப்பா

# ஐயப்பன் கவசம்

## காப்பு

அரிஹர புத்ரனை,
ஆனந்த ரூபனை
இருமூர்த்தி மைந்தனை,
ஆறுமுகன் தம்பியை
சபரி கரீசனை,
சாந்த ஸ்வரூபனை
தினம் தினம் போற்றிப்
பணிந்திடுவோம்.

ஐயப்ப தேவன்
கவசமிதனை
அனுதினம் சொல்ல
அல்லல்கள் ஒழியும்
தினம்தினம் துதிக்கத்
தீரும் வினையெல்லாம்
நாடிய பொருளும்
நலமும் வருமே.

## நூல்

மண்ணுல கெல்லாம்
காத்தருள் செய்ய
மணிகண்ட தேவா
வருக வருக
மாயோன் மைந்தா
வருக வருக
ஐங்கரன் சோதரா
ஐயப்பா வருக

புலி வாகனனே
வருக வருக
புவியெல்லாம் காத்திட
வருக வருக
பூரணை நாதனே
வருக வருக
புண்ணிய மூர்த்தியே
வருக வருக
பூத நாயகா
வருக வருக
புஷ்கலை பதியே
வருக வருக
பொன்னம் பலத்
துறை ஈசா வருக
அடியாரைக் காக்க
அன்புடன் வருக

வருக வருக
வாசவன் மைந்தா
வருக வருக
வீரமணிகண்டா
வஞ்சனை நீக்கிட
வருக வருக
வல்வினை போக்கிட
வருக வருக
ஐயம் தவிர்த்திட
ஐயப்பா வருக

அச்சம் அகற்றிட
அன்பனே வருக
இருவினை களைந்தே
எனையாட்கொள்ள
இருமூர்த்தி மைந்தா
வருக வருக
பதினெண்படியை
மனதில் நினைக்க

பண்ணிய பாவம்
பொடிப்பொடியாகும்
ஐயப்பா சரணம்
என்றே கூறிட
ஐம்பூதங்களும்
அடிபணிந்திடுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபரிகீரீசனை
நினைத்தே நீரிடத்
துன்பங்கள் எல்லாம்
தூள் தூளாகும்
சரணம் சரணம்
என்றே சொல்லிட
சித்திகள் யாவும்
வந்தடைந்திடுமே

பம்பையின் பாலன்
பெயர் சொல்லிடவும்
பகைவர்கள் எல்லாம்
பணிந்தே வணங்குவர்
ஐயப்பன் பாதம்
அனுதினம் நினைக்க
அவனியிலுள்ளோர்
அடிபணிந் தேத்துவர்

சரணம் சரணம்
ஐயப்பா சரணம்
சரணம் சரணம்
சபரி கிரீசா
சரணம் சரணம்
சத்குரு நாதா
சரணம் சரணம்
ஸ்வாமியே சரணம்

## வேண்டுதல்

சிவனார் மகன் என்
சிரசினைக் காக்க
நெடுமால் மைந்தன்
நெற்றியைக் காக்க
கஜமுகன் தம்பி
என் கண்ணினைக் காக்க
நாரணன் பாலன்
நாசியைக் காக்க

இருமூர்த்தி மைந்தன்
என் இருசெவி காக்க
வாபரின் தோழன்
வாயினைக் காக்க
பம்பையின் பாலன்
பற்களைக் காக்க

நான்முகப் பூஜீயன்
நாவினைக் காக்க

கலியுக வரதன் என்
கழுத்தினைக் காக்க
குமரன் தம்பி என்
குரல்வளை காக்க
புஷ்களை நாதன்
புஜங்களைக் காக்க
முக்கண்ணன் பாலன்
முழங்கையைக் காக்க

வீரமணிகண்டன்
விரல்களைக் காக்க
கயிலை மைந்தன்
கைகளைக் காக்க
மணிகண்ட தேவன்
மார்பினைக் காக்க
வன்புலி வாகனன்
வயிற்றினைக் காக்க

முழுமுதற் கடவுள் என்
முதுகினைக் காக்க
இருமுடிப் பிரியன் என்
இடுப்பினைக் காக்க
பிரம்பாயுதன் என்
பிட்டங்களைக் காக்க
தர்மசாஸ்தா
தொடையினைக் காக்க

முருகன் சோதரன்
முழங்கால் காக்க
கற்பூர ஜோதி என்
கணைக்கால் காக்க
பந்தள பாலன்
பாதத்தினைக் காக்க
விஜயகுமாரன்
விரல்களைக் காக்க

அன்னதானப்பிரபு
அங்கமெல்லாம் காக்க
ஆரியங்கா ஜோதி
அன்புடன் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டாளரூபி
காலையில் காக்க
நவக்ரஹநாதன்
சடுப்பகல் காக்க

மாலின் மகனார்
மாலையில் காக்க
அரிஹர சுதனார்
அந்தியில் காக்க
இன்பமய ஜோதி
இரவினில் காக்க
எருமேலி சாஸ்தா
என்றுமே காக்க

அரியின் மகனார்
அனுதினம் காக்க
நடராஜன் பாலன்
நாள்தோறும் காக்க
வாசவன் செல்வன்
வலப்புறம் காக்க
இருமுடி ஈசன்
இடப்புறம்காக்க

காக்கக் காக்கக்
கருணையால் காக்க
பார்க்கப் பார்க்க என்
பாவம் பொடிபட
இம்மையும் மறுமையும்
இல்லாதொழிந்திட
ஈசன் மகன் எனை
என்றுமே காக்க

கொடிய விஷங்களும்
கொள்ளை நோய்களும்
குருதியைக் குடிக்கும்
துஷ்டப் பேய்களும்
காந்தமலைதனைக்
கருத்தில் கொண்டிட
கலங்கி மறைந்திடக்
கருணை புரிவாய்

பில்லி சூனியம்
பலவித வஞ்சனை

பம்பையின் பாலன்
பெயர் சொல்லிடவும்
பஞ்சாய்ப் பறக்க
வரமெனக்கருள்வாய்
பயங்களைப் போக்கி
அபயம் அளிப்பாய்

வாதம், பித்தம்
சிலேட்சுமத் துடனே
வாந்தியும் பேதியும்
வலிப்பும் சுளுக்கும்
எவ்வித நோயும்
எனையணு காமல்
என்றுமே காப்பாய்
எருமேலி தேவா!

கல்வியும் செல்வமும்
கள்ளமில்லா மனமும்
நல்லோர் உறவும்
நாளும் அருள்வாய்
நல்ல மனதுடன்
உனை நான் துதிக்க
நித்தமும் அருள்வாய்
சபரிகிரீசா

காமம், குரோதம்,
லோபம், மோஹம்
மதமாச்சர்யமெனும்
ஐம்பெரும் பேய்கள்
என்றுமே என்னை
அணுக விடாமல்
ஐயப்ப தேவா
வரமெனக் கருள்வாய்

சூது, பொறாமை,
பொய், கோபமில்லாமல்
சோரம், லோபம்,
துன்மார்க்கம் கல்லாமல்
வேதநெறிதனை
விலகி நில்லாமல்
வீரமணிகண்டா
வரமெனக் கருள்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூப்பும், பிணியும்
வறுமையும், பசியும்
வந்தெனை வாட்டி
வதைசெய் யாமல்
உள்ளன்புடனே
உன்திரு நாமம்
அனுதினம் சொல்ல
அருள் தருவாயே.

### நமஸ்காரம்

அரிஹர புத்ரா
அன்பா நமோ நமோ
சபரிகிரீசா சாஸ்தா நமோ நமோ
பதினெண் படிவாழ்
பரமா நமோ நமோ
ஐங்கரன் சோதரா
ஐயப்பா நமோ நமோ

பொன்னம் பலத்துறை
புண்ணியா நமோ நமோ
புலிப்பால் ஈந்த
புண்ணியா நமோ நமோ
கரிகா யுதமுடைச்
சுந்தரா நமோ நமொ
மஹிஷி மர்தனா
மணிகண்டா நமோ

சரணம் சரணம்
சபரி கிரீசா
சரணம் சரணம்
சத்ய ஸ்வரூபா
சரணம் சரணம்
சர்வ தயாளா
சரணம் சரணம்
ஸ்வாமியே சரணம்

**பிரமாண்ட புராணத்தில் கேரளீய மஹாத்மியத்தில் பரவு ராமரால் ஐயப்பனைத் துதித்துப்பாடப்பட்ட கவசம்.**

## சபரிமலை வழிநடைச் சரணம்

| | |
|---|---|
| சாமியே | ஐயப்போ |
| ஐயப்போ | சாமியே |
| பள்ளிக்கட்டு | சபரிமலைக்கு |
| கல்லும் முள்ளும் | காலுக்கு மெத்தை |
| குன்றும் குழியும் | கண்ணுக்கு வெளிச்சம் |
| தேகபலம் தா | பாதபலம் தா |
| ஏற்றி விடப்பா | தூக்கி விடப்பா |
| தாங்கிவிடப்பா | ஏந்திவிடப்பா |
| பகவானே | பகவதியே |
| தேவனே | தேவியே |
| ஈஸ்வரனே | ஈஸ்வரியே |
| சுவாமிமாரே | ஐயப்பமாரே |
| தேவன்மாரே | தேவிமாரே |
| இருமுடிகட்டி | சபரிமலைக்கு |
| யாரைக்காண | சாமியைக்காண |
| சாமியைக் கண்டால் | மோட்சம் கிட்டும் |
| எப்போ கிட்டும் | இப்போ கிட்டும் |
| கற்பூர தீபம் | சுவாமிக்கே |
| காணிப் பொன்னும் | சுவாமிக்கே |
| கதலிப்பழமும் | சுவாமிக்கே |
| கருடன் வருவது | சுவாமிக்கே |
| வில்லாளி வீரனே | வீரமணிகண்டனே |
| பூலோக நாதனே | பூமிப்பிரபஞ்சனே |
| கட்டுங்கட்டி | சபரிமலைக்கு |
| இருமுடிகட்டு | சபரிமலைக்கு |
| முத்திரை தேங்காய் | சுவாமிக்கே |
| அவலும் மலரும் | சுவாமிக்கே |
| சுவாமியே | ஐயப்பா |
| ஐயப்பா | சுவாமியே. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதிஷ்டைகளில் யந்திரஸ்தாபனம் சில கருத்துக்கள்

-பதிசர்மா கிருஷ்ணானந்த சர்மா B.A. (Hons)
விரிவுரையாளர் சமஸ்கிருதத்துறை பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம்.

உலகின் கண் தொன்றுதொட்டு பல்வேறு வகையான வழிபாட்டு முறைகள் நிலவி வந்துள்ளன. இந்து சமய மக்கள் இறைவனை உருவமாகவும், அருவமாகவும், அருஉருவாகவும் வழிபட்டு வருகின்றனர். இவ்வகையான வழிபாடுகளில் மந்திரங்கள் மூலமாகவும், யந்திரங்களில் இறைவனை ஆவாஹனம் செய்தும் வழிபடும் முறைகளும் காணப்படுகின்றன. வைதீக மரபில் மந்திரங்கள் மூலம் இறைவனைக் கூவி அழைத்து அக்னியில் அவிசொரிந்தும் ஆகமமரபில் இறைவனைத் திருஉருவங்ளில் பிரதிஷ்டை செய்தும் வழிபாடு நடாத்தப்படும். தந்திர சாஸ்திர மரபில் குறிபிட்ட பீஜ மந்திரங்கள் மூலம் யந்திரத்திலே இறைவனை ஆவாகனம் செய்து உரிய முறைப்படி வழிபாடுகள் நிகழ்த்தப்படும். இன்றைய கிரியைகளின் செயன்முறையை நோக்கும்போது இம்மூவகையான வழிபாட்டு மரபுகளும் இணைந்த நிலையில் அமைந்துள்ளதனை நாம் நோக்கலாம்.

இருக்கும் வேதத்தில் பீஜாக்ஷரங்களும் கோணங்கள், வட்டம், ஆரை, சில்லு என்பன பற்றிய குறிப்புக்கள் பாடல்களும் காணப்படுகின்றன. சுக்கில யசுர் வேதத்தில் "யந்த்ரீ" யந்த்ரயசி" போன்ற பதங்களும், அதர்வன வேதத்தில் மந்திரங்கள் மூலம் நோயைக் குணப்படுத்துதல் தாயத்துக்கள் இரக்ஷை என்பன அணிதல் பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன. சுல்வ சூத்திரத்தில் யாகவேதி, யாக குண்டம் என்பனவற்றின் அமைப்பு கோணங்கள் பற்றிய கேத்திரகணித முறையான விபரங்கள் ஆகியவை காணப்படுகின்றன. பிருகதாரண்ய உபநிடதத்திலே யங்திரங்கள் பற்றிய அறிய ஆரம்பக் கருத்துக்கள் தெளிவாகக் காணப்படுகின்றன. சிந்துவெளி காலத்திலும் மக்கள் தாயத்துக்கள் அணிந்திருந்தமை பற்றி அறிய முடிகின்றது. மொகஞ்சதாரோ நாகரீகத்தில் "சுவஸ்திக" போன்ற குறியீடுகள் பயன்படுத்தி இருந்தமை பற்றி அறிய முடிகின்றது. மேலும் சிந்துவெளியில் கிடைத்த 'யோனிக்கற்கள்' மௌரியர் சுங்கர் என்பவர்களுடைய காலத்தில் கிடைத்த யோனிக்கற்கள், வட்டத் தகடுகள் போன்றவையும் சாக்த வழிபாட்டு முறையில் இடம்பெறும் சக்ர - யந்திர வழிபாட்டின் தொன்மைக்குச் சான்று பகர்வதாக பனேர்ஜி என்பவர் குறிப்பிடுகின்றார். கி. பி. 13ம் நூற்றாண்டைச் சேர்ந்த கணித கௌமுதி என்ற நூலிலும் வட்டங்கள், கோணங்கள் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. 17ம் நூற்றாண்டில் கடதாசியிலும் செப்புத்தகட்டிலும் வரையப்பட்ட யந்திரங்கள் காணப்பட்டன. 18ம், 19ம் நூற்றாண்டுகளில் ராஜஸ்தானில் விஷ்ணு, சக்தி பற்றிய பல யந்திரங்கள் வழிபாடு செய்யப் பட்டுள்ளன. 16ம் நூற்றாண்டில் கணபதி, காளி போன்ற தெய்வத்திற் குரிய யந்திரங்கள் கிரந்தலிபியிலும், தமிழிலும் பீஜாக்ஷரங்கள் எழுதப் பட்டவையாக தமிழ் நாட்டில் காணப்பட்டன. இவற்றை நோக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது யந்திரங்களின் மூலம் வழியாடு இயற்றும் முறைமையானது தந்திர சாஸ்திரங்களின் அடிப்படையிலான கிரியைகள், பாவனையான் முத்திரைகள் என்பவற்றுடன் கூடியதாக ஒரு நீண்ட காலப் பாரம்பரியத்தை உடையதாக விளங்குவதைக் காணலாம்.

யோசினி தந்திரத்தில்

**'லிங்கஸ்தாம் பூஜயேத்தேவீம்**
**புஸ்தகஸ்ய தததைவச**
**மண்டலஸ்தாம் மகாமாயாம்**
**யந்திரதாம் ப்ரதிமாசுர**
**ஜலஸ்தாம் வா சிலாஸ்தாம் வா**
**பூஜயேத் பரமேஸ்வரீம்'**

என தேவியை வழிபடும் முறை பற்றிக் கூறப்பட்டுள்ளது. மேலும்

**'அஞ்ஞாம் சாக்ஷாத்பகவத் பூஜாயாகா**
**கர்த்தும் அசக்யத்தே**
**ப்ரதிமாயாமேவ கர்த்தவ்யத்**
**வாத்ததர்த்தம் ப்ரதிமா நிர்மிதவ்யா'**

என உண்மையாக பகவானுடைய ஆராதனையை ஞானமில்லாதவர்கள் உருவ வழிபாட்டிலேயே மேற்கொள்ள முடியும். வேறு வழிகளில் அவர்கள் மேற் கொள்வதற்கு சக்தியற்றவர்கள். ஆகவே உருவ வழிபாட்டுமுறை செய்யப்பட்டது. எனவும் தந்திரசார சங்கிரகம் கூறுவதனை நோக்கும்போது மந்திர - தந்திர யந்திர வழிபாட்டு முறைமைகளுக்கு பிற்பட்டதாகவே உருவ வழிபாட்டு மரபு ஆரம்பித்திருக்கலாம். என கருதப்படுகின்றது.

யந்திரங்கள் பிம்பத்திற்கு உயிர் ஆகக் கருதப்படுகின்றது. பிரதிஷ்டை நிகழ்விற்குரிய உத்தமமான காரியங்களில் ஒன்றாக யந்திர ஸ்தாபனம் என்னும் கிரியை கூறப்படுகின்றது. பிம்பமாகிய சரீரத்திற்கு மந்திரம் சிவன் போன்றது. யந்திரம் பிராணனைப் போன்றது இங்கு யந்திரத்தில் எழுதப்படும் எழுத்துக்களே மந்திரம் எனவும் கூறப்படுகின்றது. இறைவனை மந்திரவடிவினன் "மந்திர ரூபீ மஹாதேவக்" என சிறப்பித்துக் கூறப்படுகின்றது. இவ்விதம் எழுத்துக்களால் அடைக்கப்படும் யந்திரம் - சக்கரம் என அழைக்கப்படும்.

**'வர்ணாத்வ நக க்ரமேணேவ சாக்ஷ**
**ராணிலிகேத் க்ரமாத்**
**ஏவம் ஷட் விம்சதங்கம் ஸ்யாத்**
**விம்சத்த்ரயங்கம் ததக ஸ்ருணு'**

என காமியம் யந்த்ரோத்காரண படலத்தில் கூறப்படுகின்றது. மேலும் பிராசாத ஷட்சுவோகி என்ற நூலிலும் கடவுளுக்கு அங்கங்களாக அமைந்தனவே எழுத்துக்கள் எனவும் கூறப்படுகின்றது. எனவே யந்திரங்கள் எழுத்துக்களோடு கூடியவையாக அமைதல் வேண்டும். இத்தகைய யந்திரங்களே தெய்வசாந்நியத்தியத்தை நன்கு ஏற்படுத்த வல்லனவாகும். மேலும் யந்திரங்கள் மந்திரமயமானவை, மந்திரங்கள் தெய்வங்களுக்கு ஆத்மா போன்றது ஆத்மாவிற்கும் தேகத்திற்கும் இடையேயான தன்மை போன்றதே யந்திரங்களுக்கும் தெய்வத்திற்கும் இடையேயான தன்மையாகும் என பின்வருமாறு சப்த கல்ப்பத்ருமம் கூறுகின்றது.

**'யந்திரம் யந்திரமயம் ப்ரோக்தம்**
**மந்த்ராத்மா தேவதைவஹி**
**தேகாத்மநோ யதா பேதோ யந்த்ர**
**தேவயோர்ஸ்ததா'**

இயந்திரங்கள் தாபன யந்திரங்கள் ரக்ஷாயந்திரங்கள் என இரு வகை யாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்படுகின்றன. புள்ளி, வட்ட, தாமரை இதழ் இவற்றோடு கூடிய யந்திரங்கள் தாபன இயந்திரங்கள் எனவும், சதுரஸ் வகைகளையும் கோணங்களையுடையது மான யந்திரங்கள் ரக்ஷாயந்திங்கள் எனவும் அழைக்கப்படும். ரக்ஷா யந்திரங்கள் கிரகபீடைகள் மற்றும் கெட்டநிமித்தம். சகுனம் என்பவற்றிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அணியப்படுவன வாகும். தாபன இயந்திரங்களே பிம்பத்திற்கு கீழேயும் தர்சனத்திற்காகவும் வைக்கப்படுவன. இவ் இயந்திரங்கள் கோவில் அமைந்து உள்ள கிராமத்திலேயே நிர்மாணிக்கப்பட வேண்டுமெனவும் இவை நாலுயவப்பிரமாணமுள்ள இருபத்தி நான்குஅங்குல நீளமுள்ள தங்கம் அல்லது வெள்ளி அல்லது செப்புத் தகடுகளினால் அமைக்கப்பட வேண்டும் என சாஸ்திரங்கள் கூறுகின்றன. தங்கத் தகட்டிலே யந்திரம் அமைப்பது உத்தமம் எனவும் மற்றவை மத்திமம், அதமம் என வகைப்படும் எனவும் கூறப்படுகின்றது. மேலும் விமானம், கோபுரம், சுயம்புலிங்கம் என்பவற்றிற்கு யந்திரஸ்தாபனம் அவசியமற்ற தாகும். மந்திரங்களின்றிச் சிற்பியி னால் செய்யப்பட்ட யந்திரத்தை வேதிகையில் யாகாரம்பத்தன்று கும்பத்தினடியில் வைத்து மூல மந்திரத்தினால் கோடிமுறை ஜபம் செய்து அதனளவு காற்பங்கு எண்ணிக்கை ஹோமமும் இதன் காற்பங்கு தர்ப்பணமும் இதன் காற்பங்கு பிராம்மணபோஜனமும் செய்து முறைப்படி பூசித்து அஷ்ட பந்தன தினத்தில் பீடத்தில் ரத்னநியாசம் என்னும் கிரியை செய்து யந்திரத்தை இதற்குமேல் வைத்தல் வேண்டும்.

இயந்திரங்களில் வரையப்படும் கோடுகள் பாதாளரேகை, ஆகாய ரேகை என இருவகையாக உள்ளன. பாதாள ரேகை உள் அமர்ந்ததாக வும் ஆகாயரேகை மேல் மிதப்பு உள்ளதாகவும் காணப்படும். யந்திரத்தின் அங்கங்கள் சாங்கம், உபரங்கம் பிரத்யங்கம் என மூவகையாகக் கூறப்படும் புள்ளி வட்டம் என்பன சாங்கம் எனவும் வெளிவிருத்தம் உபாங்கம் எனவும் பூபுரம் பிரத்யங்கள் எனவும் கூறப்படும். மேலும் பிந்து-சிரசு, உள்விருத்தம்-இருதயம், வெளி விருத்தம்-நாபி, தளங்கள்-பாதம் எனவும் யந்திரத்தின் அங்கங்கள் கூறப்படுகின்றன.

**'யந்ராணம்கடனா நோக்தா குப்யர்த்தம் நாக்ஞாதவசாத் தத்ர கேதுரயம் ஞேயோ வ்யக்தாநைதே பலப்ரதாகா'**

யந்திரங்கள் இரகசியமானவை பாதுகாக்கப்பட வேண்டியவை அவை களில் குற்றங்கள் இருந்தால் மாறுபாடான பலனைக் கொடுக்கக் கூடியவை இவற்றின் நீள அகலங்கள் சமமாக இருத்தல் வேண்டும் இவை சமமின்றி இருப்பின் வியாதி உண்டாகும். பழுதடைந்திருப்பின் கெட்ட செயல்களும் மலினமடைந்திருப்பின் கார்யசித்திகளில் குறைவும். துவாரம் ஏற்பட்டிருப்பின் துன்பமும் உண்டாகும் என கூறப்படுகின்றது.

யந்திரங்கள் தர்சனயந்திரமாக அமைக்கப்பட்டு இறைவன் திரு உருவிற்கு முன்பு வைக்கப்படும் வழக்கமும் உண்டு. இவற்றிற்கு திருஉருவத்திற்கு செய்யப்படுவது போன்று அபிஷேக ஆராதனைகளும் நிகழ்த்தப்படும் யந்திரங்களுக்கு எல்லாம் மேலானது "யந்ரராஜ" என சிறப்பாக அழைக்கப்படுவது ஸ்ரீசக்கரமாகும். இது தேவியின் திருஉருவை ஒத்தது. அருஉருவ வழிபாட்டிற்குரிய சாதனமாக அமைவது. தனிக்கோயிலில் ஸ்ரீவக்கரம் பிரதிட்டை செய்யப்பட்டு வழிபாடுகளும் நடாத்தப்படுகின்றது.

இத்தகைய சிறப்பான தன்மை களைக் கொண்ட தந்திர சாஸ்திரங் களினடிப்படையிலமைந்த யந்திர வழிபாடானது எமது வழிபாட்டு மரவில் இணைந்த ஒரு சிறப்புடையதாக விளங்கி வருகின்ற தன்மையை நாம் கண்டுணரக் கூடியதாக உள்ளது. *




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்ஜோதி........ ஞானாமிர்தம்

## வினா - விடை

1. **வினா :** ஆகமங்கள் எத்தனை? உப-ஆகமங்கள் எத்தனை?

**விடை :** ஆகமங்கள் 28, உபாகமங்கள் 207

2. **வினா :** 28 ஆகமங்கள், 207, உப-ஆகமங்கள் இவற்றின் பெயர்களை தருக?

**விடை :**

| ஆகமம் | உப-ஆகமங்கள் |
|---|---|
| 1. காமிகம்: | வக்தாரம், பைரவோத்தரம் நாராசிமம் 3 |
| 2. யோகஜம்: | (தாரம், வீணாசி, கோத்ரம், ஆத்ம யோகம், சந்தம் 5 |
| 3. சிந்தியாகமம்: | சுசிந்தியம், சுபகம், வாமம் பாபநாசம், பரோத்பவம், அமிர்தம் 6 |
| 4. காரணாகமம்: | பாவனம், மாரணம், தௌர்க்கம் மாஹேந்திரம், பீமஸம்ஹிதா, காரணம், வித்வேஷம் 7 |
| 5. அஜிதம் | ப்ரபூதம், பரோத்பூதம், பார்வதி ஹம்ஹிதா பத்ம ஸம்ஹிதா 5 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. தீப்தாகமம்: அமேயம், அப்த்தம் ஆச்சாத்யம், அசங்கியம், அமிருதௌஜஸம், ஆனந்தம், மாதவோத்புதம், அற்புதம், அக்ஷயம்

7. சூக்ஷமம்: உபாகமமும் சூக்ஷமம் என்ற ஒன்றே.

8. ஸஹஸ்ராகமம் அதீதம், மங்களம், சுத்தம், அப்ரமேயம், ஜாதிபாக், பிரபுத்தம், விபுதம், ஹஸ்த்தம், அலங்காரம், சுபோதம்.

9. அம்சுமான்: வித்யா புராண தந்திரம், வாஸவம், நீல லோஹிதம், ப்ரகரணம், பூத தந்திரம், ஆத்மாலங்காரம், காச்யபம், கௌதம், ஐந்திரம், பிராம்மம், வாசிஷ்டம், ஈசானோத்தரம்.

10. சுப்ரபேதம்: சுப்ரபேதம்

## ருத்ர பேதாகமங்கள்

11. விஜயம்: உத்பவம், ஸௌம்யம், அகோரம், ம்ருத்யு நாசனம், கௌபேரம், மஹா கோரம், விமலம், விஜயம். 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 12. நிச்வாஸம்: | நிச்வாஸம், நிச்வாசேத்திரம், நிச்வாஸுகோதயம், நிச்வாஸ நயனம், நிச்வாஸ காரிகா, நிச்வாஸகோரம், நிச்வாஸ குஹ்யம், மந்திர நிஸ்வாசம். |
| 13. ஸ்வாயம்புவம்: | ப்ரஜாபதி மதம், பத்மம், நளினோத்பவம், ஆக்னேயம். |
| 14. அனலம்: | ஆக்னேயம். |
| 15. வீரம்: | பிரஸ்தரம், புல்லம், அமலம், ப்ரபோதகம், அமோகம், மோகஸ்மயம், சகடம், சகடாதிகம், பத்ரம், விலேகனம், வீரம், ஹலம், போதகம். |
| 16. ரௌரவம்: | காலாக்கியம், கால தகனம், ரௌரவம், ரௌவரோத்தரம், மஹா காலமதம், ஐந்தரம். |
| 17. மகுடம்: | மகுடம், மகுடோத்தரம். |
| 18. விமலம்: | அனந்தம், போகம், ஆக்ராந்தம், வ்ருஷருஷபிங்கம், வ்ருஷோதரம், வ்ருஷோத்பூகம், ரௌத்ரம், ஸுதந்தம், தாரணம், ஆரேவதம், அரிக்ராந்தம், அஷ்டஹாஸம், பத்ரவிதம், அர்ச்சிதம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| **19.** சந்திர ஞானம்: | ஸ்ஸதிரம், ஸ்தானு, மஹாந்தம், வாருணம், நந்தி கேஸ்வரம், ஏகபாத புராணம், சாங்கரம், நீலருத்ரம், சிவ பத்ரம், கல்பபேதம், ஸ்ரீ முகம், சிவஸாஸனம், சிவ கேகரம், தேவிமதம். |
| **20.** முகபிம்பம்: | சதுர்முகம், ஸம்ஸ்தோபம், பிரதிபிம்பம், அயோகஜம், ஆத்மாலங்காரம், லாயவ்யம், தௌடிகம், துடிநீரகம், குட்டிமம், துலாயோகம், காலாத்யயம், மஹா சௌரம், பட்டசேகரம், நைரிருதம், மஹா வித்யா |
| **21.** ப்ரோத்கீதம்: | வாராஹம், கவசம், பாசபந்தம், பிங்களாமதம், அங்குசம், தண்டதரம், தனுர்த்தரம், சிவஞானம், விக்ஞானம், ஸ்ரீ காலஞானம், ஆயுர்வேதம், தனுர் வேதம், ஸர்ப்பதம் ஷட்ர, விபேதனம், கீதகம், பரதம், ஆதோத்யம். |
| **22.** லலிதம்: | லலிதம், லலிதோத்ரம், கௌமாரம். |
| **23.** ஸித்தம்: | ஸாரோத்தரம், ஔசனஸம் சாலாபேதம், சசிமண்டலம். |
| **24.** சந்தானம்: | லிங்காத்யக்ஷம், கராத்யக்ஷம், அமரேச்வரம், சங்கரம், அஸங்க்யம், அநிலம், த்வந்தம். |
| **25.** சர்வோக்தம்: | சிவ தர்மோத்தரம், வாயுப் ரோக்த்தம், திவ்யப்ரோக்தம், ஈசானம், சர்வோத்கீதம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. பாராமேஸ்வரம்: மதங்கம், யக்ஷிணீபத்மம், பாரமேஸ்வரம், புஷ்கரம், சுப்ரயோகாம், ஹம்ஸம், சாமான்யம்.

27. கிரணம்: காருடம், நைருதம், நீலம்ருக்ஷம், பானுகம், தேனுகம், ப்ரபுத்தம், புத்தம், காலம்.

28. வாதுளம்: வாதுளம், உத்தார வாதுளம், கால ஞானம், புரமோகிதம், சர்வம், தர்மாத்மகம், ச்ரேஷ்டம், நித்யம், சுத்தம், மஹாகனம், விச்வம், வித்வாத்மகம்.

3. வினா : உருத்திராக்ஷம் எப்படி தோன்றியது?

விடை : சிவபெருமான் திரிபுர தகனம் செய்யும் போது உடலிலிருந்து ஏற்பட்ட வியர்வை பூமியில் விழ அதிலிருந்து ஒரு விருக்ஷம் (மரம்) உண்டானது என்றும் அதுவே ருத்திராக்ஷமரமாகும். இம்மரம் எனது அம்சமானது இதன் காய்களை அணிபவர்களின் பாபங்களைப் போக்குகிறேன் என ஈசன் அருளியதாக பத்மபுராணத்தில் கூறப்பட்டுள்ளது.

4. வினா : உருத்திராக்ஷ மணிக்கு நிறங்கள் உண்டா?

விடை : ஆம் வெள்ளை, சிவப்பு, மஞ்சள், கறுப்பு நிறங்கள் உண்டு. ஆயினும் அதிகப்படியாக விளைவது சிவப்பு, கறுப்பு ருத்திராக்ஷங்களே.

5. வினா : உருத்திராக்ஷ மரம் விளையும் இடங்கள் எவை?

விடை : ஹிமாலயம், ஜாவாத்தீவு, நேபாளம் ஆகிய இடங்களில் அதிகமாக விளைகிறது.

6. வினா : சிவ வழிபாட்டுக்கு ஜீவஸ்தானமாகவுள்ள மஹா மந்திரம் எது?

விடை : நமசிவாய எனும் பஞ்சாக்ஷரமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. வினா : பஞ்சாக்ஷரம் எத்தனை வகைப்படும்? அவை எவை?

விடை : பஞ்சாக்ஷரம் ஐந்து வகைப்படும். அவையாவன:

1. ஸ்தூல பஞ்சாக்ஷரம் - (நமசிவாய)
2. சூக்ஷ்ம பஞ்சாக்ஷரம் - (சிவாயநம)
3. காரண பஞ்சாக்ஷரம் - (சிவாய சிவ)
4. மஹா காரண பஞ்சாக்ஷரம் (சிவ)
5. மகா மனு பஞ்சாக்ஷரம் - (சி)

8. வினா : உபதேச வாயிலாக அறியப்பட வேண்டிய பஞ்சாக்ஷரத்தின் விளக்கம் என்ன?

விடை : சிகாரம் - சிவம் நகாரம் - திரோதம்

வகாரம் - அருள் மகாரம் - மலம்

யகாரம் - ஆன்மா

9. வினா : நமசிவாய என்னும் மகா மந்திரத்தில் 'நம' எனும் பதம் எதனைக் குறிக்கும்?

விடை : 'நம' எனும் பதம் பசுவையும்

'சி' எனும் பதம் பதியையும்

'வய' எனும் பதம் பாசத்தையும் குறிக்கும்.

10. வினா : 'நமசிவாய' எனும் பஞ்சாட்சரத்தினுள் சகல தத்துவங்களும் அடங்கியுள்ளன என்பதனை சிவவாக்கியர் எவ்வாறு பாடினார்?

விடை : சிவாய வென்னும் அக்ஷரம் சிவனிருக்கும் அக்ஷரம்
உபாய மென்று நம்புவோர்க்கு உண்மையான அக்ஷரம்
கபாடமிட்ட வாயுவைக் கடந்து போகும் வாயுவை
உபாயமிட்டழைக்குமே சிவாய என் றெழுத்துமே//

11. வினா : பஞ்சாக்ஷரத்தின் சிறப்பை பல பாடல்களில் பாடியவர் யார்?

விடை : திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. வினா : சம்பந்தர் பாடிய பஞ்சாக்ஷர சிறப்பு அடங்கிய பாடல் வரிகள் எவை?

விடை : 1. வேதம் நான்கிலும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம் நமச்சிவாயவே

2. சிந்தும் வல்வினை செல்வமும் மல்குபால்
நந்தி நாமம் நமசிவாயவே

3. நம்பன் நாமம் நமசிவாயவே

4. நல்லார் நாமம் நமசிவாயவே

நாவுக்கரசு சுவாமிகள்

1. நற்றுணையாவது நமசிவாயவே

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

1. நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லு நா
நமசிவாயவே

மாணிக்கவாசக சுவாமிகள்

1. நமச்சிவாய வாழ்க என்று பாடினார்.

13. வினா : தமிழ் மூதாட்டி ஔவை தமது நல்வழியில் நமசிவாய சிறப்பை எவ்வாறு கூறுகின்றார்?

விடை : 'சிவாயநம' என்று சிந்தித்திருப் போருக்கு அபாயம் ஒருநாளும் இல்லை.

14. வினா : திருக்குறள் தந்த வள்ளுவர் ஐந்தெழுத்தாகிய பஞ்சாக்ஷரத்தின் சிறப்பை எவ்வாறு குறிப்பிட்டார்?

விடை : சிறப்பு வனப்பு யாப்பு நடப்பு மறைப்போடு உறக்காண்பர் 'ஐந்தெழுத்தினுள்'

15. வினா : திருமந்திரம் பாடிய திருமூலர் ஐந்தெழுத்தின் பெருமையை எவ்வாறு குறிப்பிட்டுள்ளார்?

விடை : ஐம்ப தெழுத்தே அனைத்து வேதங்களும்
ஐம்ப தெழுத்தே அனைத்து ஆகமங்களும்
ஐம்ப தெழுத்தேயு மாவது அறிந்தபின்
ஐம்ப தெழுத்துப் போய் அஞ்செழுத்தாமே!
(ஐந்து எழுத்தில் ஐம்பது எழுத்தும் அடங்கும் என்கிறார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீதேவி இராஜராஜேஸ்வரி துணை

மாதாந்த வெளியீடு

*சிவாச்சாரியாரின்*

# அருள்ஜோதி

*(ஆன்மீக மலர்)*



**சந்தா விபரம்**

| | |
|---|---|
| ஆயுட் காலம் | 1000.00 |
| ஆண்டுச் சந்தா | 300.00 |
| தனிப்பிரதி | 25.00 |
| வெளிநாடுகளுக்கான ஆயுட் சந்தா | U. S. $ 50 |

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி


சர்வதேச இந்து மத குருபீடாதிபதி

**கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார்**

(அகில இலங்கை சமாதான நீதிவான்)

**சர்வதேச இந்துமத குருபீடம்**

**INTERNATIONAL HINDU RELIGIOUS GURU PEEDAM**

(APPROVED BY THE GOVERNMENT OF SRI LANKA)

**சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடம்**

**46, 7வது லேன், கொட்டாஞ்சேனை, கொழும்பு-13.**

46, 7th Lane, (Bloemendhal Road) Kotahena, Colombo-13.
Tel: 2393436, 0722 422239



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*Printed by: Anush Printers Col-11. Tel: 0777 244893*